

Meeting with Government Officials at District Secretariat – Jaffna on 07 September 2020



Meeting with Representative from Civil Societies at District Secretariat - Jaffna on 07 September 2020




Meeting with Representatives from Micro Finance Institutions at The Thinnai - Jaffna on 07 September 2020



Meeting with Regional Managers' of Financial Institutions at The Thinnai - Jaffna on 07 September 2020



Meeting with Representative from Civil Societies at Regional Office – Kilinochchi on 08 September 2020

# சமூகக் கட்டமைப்பை உடைத்தெறியும் நுண்கடன்கள்

# கொள்கை வகுத்து செயற்படத் தயார்

## யாழில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மக்கள் அதிகளவிலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் சம காலத்திலே வட்டி உயர்வு, பெற்றுக் கொண்ட நுண்கடனை கட்ட முடியாது போதல் போன்ற பல காரணங்களால் குடும்பப் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**



நுண்நிதிக் கடன் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. நுண்நிதிக்கடன் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கு, மத்திய வங்கி, அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு தரப்பட்ட கொள்கைகளை வகுத்து எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கட்டியெழுப்பும் நோக்குடனே குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் போது சுமார் 25 பயனாளிகள் நுண்கடன் தொடர்பில் தமது தனிப்பட்ட ரீதியான பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளுக்காக அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வுத் திட்டங்களையும் ஆளுநர் முன்னிலையில் தெரிவித்தனர்.

பயனாளிகள் கூறிய கருத்துக்களை பதிவு செய்த பின்னர் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தெரிவிக்கையில், நுண்நிதிக்கடன் தொடர்பில் நீங்கள் அனைவரும் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என விளங்கிக் கொள்கிறேன். கடந்த காலங்களிலே அதாவது உள்நாட்டுப் போருக்கு முன்னதான காலப்பகுதியில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் சில நிறுவனங்கள் கடந்த காலங்களிலும் சிறப்பாக செயற்பட்டுள்ளன. அவற்றை மீளவும் கட்டியெழுப்பி இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து பொதுமக்கள் விடுக்கக் கூடிய கொள்கைகளை வகுப்பதற்கு நான் தயாராகவுள்ளேன். என தெரிவித்தார். நுண்நிதிக் கடன் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள், புகார்கள் இருப்பின் 021 228 5915, 009411247 7966 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பினை ஏற்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தகலந்துரையாடலில் மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன், பிரதி ஆளுநர், உதவி ஆளுநர்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய அங்கஜன் இராமநாதன் மற்றும் யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ம.பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (5-6)

News related to the Governor's Visit – 2020